மதுரை சிறைச்சாலையிலே மாண்டார் என்று சொல்லிக் கொள்கிறேன். அவரும் இஸ்லாமியர்தான், இவரும் இஸ்லாமியர்தான்.

அந்த இரங்கல் கூட்டத்தில் நான் பேசினேன். எங்கே? மத்திய சிறைச்சாலைக்கு உள்ளேயே இரங்கல் கூட்டம் போட்டு ஆறுதல் கூறி பேசினேன். 10 ஆயிரம் தொண்டர்களும் உடனிருந்தார்கள். ஆக, அடித்துக் கொல்லப்பட்டு இறந்தார் என்பதல்ல. அது இயற்கையினுடைய ஒரு சம்பவம். ஆனாலும்கூட, வருகின்றபோது இதற்காக, தெளிவான அறிக்கையை நான் ஐ.ஜி. இடத்திலே கேட்டிருக்கிறேன். இப்போது டி.ஐ.ஜி. அவர்கள் தகவலுடன் வந்து கொண்டிருக்கிறார்கள். என்றாலும்கூட, சம்பவம் அடித்துக் கொல்லப்பட்டது என்பதல்ல, இயற்கையினுடைய ஒரு நிகழ்வு என்பதை இந்த மாமன்றத்திற்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

3. கவன ஈர்ப்பு

(அ) கோவை, செல்வபுரம் வடக்கு வீட்டுவசதி வாரிய வீடுகளைப் பழுதுபார்க்க வேண்டிய அவசியம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு.

திரு. கே. செல்வராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை, செல்வபுரம் வடக்கு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதி வீடுகள் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளதைப் பழுதுபார்க்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[திரு. சே. ரகுபதி] [1995 மே 6

அறிக்கை

கோவை மாவட்டதிலுள்ள கோவை செல்வபுரம் (வடக்கு) பகுதியில் 874 குடியிருப்புகள் உள்ளன. அவற்றில் 404 அடுக்கு மாடி வீடுகளும் 470 வரிசை வீடுகளுமாகும். இவைகள் கடந்த 1965-ஆம் ஆண்டிலிருந்து 1972-ஆம் ஆண்டு வரை படிப்படியாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டிமுடிக்கப்பட்டன. அவை குடிசை மாற்று வீடுகளாகும். இவை தக்க கவனத்துடன் குடியிருப்போரால் உபயோகப்படுத்தப்படாததால் இத்தகைய சூழ்நிலை 20 ஆண்டுகளுக்குப் பின் ஏற்பட்டுள்ளது. பராமரிப்பு மற்றும் மராமத்து வேலைகளுக்கு நிதிப்பற்றாக்குறையினால் தேவையான அளவிற்கு பணிகள் செய்ய இயலவில்லை.

திரு. கே. செல்வராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையில் கூறியுள்ளதைப் படித்தேன். அந்த வீடுகள் எல்லாம் 1965-லி ருந்து1973 வரை படிப்படியாகக் கட்டப்பட்ட வீடுகள். சுமார் 22 ஆண்டுகளாக அந்தப் பகுதி வீடுகள் எல்லாம் பழுது பார்க்காமல் ஒவ்வொரு மாடிக் கட்டிடத்தில் உள்ள கம்பிகள் எல்லாம் வெளியிலே தெரிகின்ற அளவுக்கு காரைகள் எல்லாம் இடிந்து மிகவும் மோசமாக உள்ளது. அந்தப் பகுதியில் உள்ள கழிவுநீர் வெறியேற்றப்பட முடியாமல் அங்கே தேங்கி நிற்பதால் அங்கே வாழுகின்ற மக்கள் அவதியுறுகின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதெல்லாம் பரிசீலித்து பணிகள் செய்யப்படும் என்று அறிக்கையில் கூறியுள்ளார்கள். 60 வீடுகளுக்கு சென்ற ஆண்டே செய்திருப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு இதே அவையில் நான் கவன ஈர்ப்பு கொண்டு வந்ததன் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கி அதைச் செய்து கொடுத்தார்கள். அதற்கு அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்பு பணிகளுக்காக 7 இலட்சம் ரூபாய் என்று மதிப்பீடு செய்திருப்பது போதாது. கழிவுநீர் வெளியேற்றுகின்ற சாக்கடைகளை பாதாளச் சாக்கடைத் திட்டத்தோடு இணைப்பதற்கு அதிகமாகச் செலவு ஆகும். தவிர, ஒவ்வொகு வீட்டையும் செப்பனிடவும் செலவு ஆகும் என்ற காரணத்தினால், அந்தத் தொகையை அதிகப்படுத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே, இப்போதே அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திட்ட மதிப்பீடு 7 இலட்சம் ரூபாய் செலவு அளவிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அரசினுடைய ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அந்த நிதி போதாது என்கிற சூழ்நிலை ஏற்படுமேயானால், வீட்டுவசதி வாரியம் இதற்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு

செய்யவேண்டுமென்று கேட்குமேயானால், அதன் பிறகு அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரிய குடியிருப்புப் பகுதிகளில் வாழுகின்ற மக்கள் எல்லாம் ஒவ்வொரு தேர்தலிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே வாக்களித்து வந்தவர்கள். முதன் முதலாக இரட்டை இலைச் சின்னத்தில் அந்தத் தொகுதியில் மாண்புமிகு உறுப்பினர் செ. அரங்கநாயகம் வெற்றிபெற்ற தொகுதி. அனைத்து மக்களும் இந்த ஆட்சிக்கு வாக்களித்தவர்கள். ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு வாழுகின்ற அந்த மக்களுடைய அடிப்படை வசதிகளுக்கு அங்கு தளங்கள் இடிந்து விழுந்து—இன்னும் எல்லாப் பணிகளும் செய்ய வேண்டிய நிலையில் மிகவும் மோசமாக அந்த வீடுகள் இருப்பதால்—மேற்பார்வையாளர்களை அனுப்பி மீண்டும் அந்தப் பணிகளைப் பார்க்க ஏற்பாடு செய்து திட்ட மதிப்பீட்டை அதிகப்படுத்தி, தரைகள், மேல்தளங்கள், கழிவுநீர் வாய்க்கால்கள் ஆகிய அனைத்துப் பணிகளையும் செய்து கொடுக்க வேண்டும். இப்போது அங்கு இருக்கின்ற மக்கள் அடிப்படை வசதிகளான தெருவிளக்கு, குடிநீர், மற்ற பணிகளுக்கெல்லாம் அந்த இடத்தை மாநகராட்சிக்கு ஒப்படைத்திருந்தாலும்கூட, இன்னமும் அந்தப் பணிகளைச் செய்வதற்கு வீட்டுவசதி வாரியம் பணம் கட்டவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் துறை அதிகாரிகளை அழைத்துப்பேசி, அந்தப் பகுதியில் வாழுகின்ற சுமார் 10 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் வாழுகின்ற செல்வபுரம் வடக்கு வீட்டு வசதி வாரிய குடியிருப்புப் பகுதிக்கு வேண்டிய அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? இந்த ஆண்டே அந்தப் பணிகளைத் துவக்குவதற்கு அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து செயல்படுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரிய வாடகைக் குடியிருப்புகளுக்கு, பராமரிப்புக்காக அதிகமான தொகையைச் செலவு செய்கின்ற அரசு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசுதான். கடந்த காலங்களிலே அந்த அளவுக்கு அங்கே செலவு செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மேலும் அங்கே குடியிருப்பவர்களும் தக்க கவனத்தோடு அவற்றை உபயோகிக்காததால் இந்த பழுதுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதும் இங்கே குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

முற்பகல் 10-15

இன்றைக்கு, அவற்றிற்கெல்லாம் அடிப்படை வசதிகளுக்காக, மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில், நம்முடைய உறுப்பினர் அவர்கள், வீட்டுவசதி வாரியத்தினால் பணம் செலுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிச் செலுத்த வேண்டியிருந்தால், அதை உடனடியாகச் செலுத்த ஏற்பாடுகள் செய்து, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, புரட்சித் தலைவியினுடைய அரசு முழு முயற்சிகளை உடனடியாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பட்டுக்கோட்டை அக்னி மற்றும் நசுவினி ஆறுகளில் வரி செலுத்தாமல் மணல் எடுத்துச் செல்வது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கி. பாலசுப்பிரமணியன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு.கி. பாலசுப்பிரமணியன்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து நான் இந்த அரசின் கவனத்திற்கு, பட்டுக்கோட்டை அக்னியாறு மற்றும் நசுவினி ஆற்றில் மணலை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை அப்படியே படியுங்கள்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மணலை எடுத்துச் செல்வது பற்றி விவாதிக்க, அரசு அதிகாரிகளைக் கட்டாயப்படுத்தி எடுத்து செல்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள், அதில் இருப்பதை அப்படியே படியுங்கள். விளக்கம் கேட்பதை இரண்டாவதாக, அமைச்சர் பதில் சொன்னதற்குப் பிறகு வைத்துக் கொள்ளலாம். இப்போது, அப்படியே படியுங்கள்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பட்டுக்கோட்டை அக்னி மற்றும் நசுவினி ஆற்றில் லாரி உரிமையாளர்கள் அரசுக்கு வரி செலுத்தாமல் அதிகாரிகளைக் கட்டாயப்படுத்தி மணல் எடுத்துச் செல்வது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு தொழில்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.